## பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

***கிழமை இல. 41-2021***

இலையுதிர்கால விடுமுறையை சிறப்பாகக் களித்திருப்பீர்கள் என நம்புகின்றோம்.

**16.10.2021 - சனிக்கிழமை - கலை - வாணிவிழா 2021**

ஓசன் பாடசாலை எமக்கு விதிக்கப்பட்ட விதிகளுக்கமைய நேரடியாக நவராத்திரி விழா ஓசன் பாடசாலையின் மேல் கட்டிடத்திலுள்ள ஒன்றுகூடல் கூடத்தில் காலை 10:00 நடைபெறும். முழுவிபரங்கள் - இணைப்பைப் பார்க்கவும்.

தங்கள் குழந்தைகளுக்கு ஏடுதொடக்கவோ அல்லது சிறுவர் வகுப்பில் இணைக்கவோ அல்லது கலைவகுப்புகளில் புதிதாக இணைக்க விரும்பினாலோ
விரைவில் கலைப்பொறுப்பாளருடன் தொடர்புகொள்ளவும்.

கலைப்பொறுப்பாளர் திருமதி. லூர்துமேரி இளங்கீரன் பெர்ணாண்டோ 97184417.

***மாணவர்களின் வரவு பதிவு - 09:30 மற்றும் நிறைவு - வழமையான பாடசாலைநேரம்.***

குறிப்பு: பெற்றோர்குழு மற்றும் வகுப்புப் பிரதிநிதிகளின் உதவியுடன் மாணவர்களுக்கு திருச்சோறு (பிரசாதம்) மண்டபத்திலும் வகுப்பறைகளிலும் வழங்கப்படும்.

***கல்வி***

*தமிழ் மொழித் தேர்வுக்கான தயார்படுத்தல் வகுப்புகள் 16.10.2021 நேரம் 12:00-14:00 ஓசன் பாடசாலையில் நடைபெறும். அன்றைய வகுப்பின்
பொறுப்பாசிரியராக ஆசிரியர் உமாபாலன் சின்னத்துரை அவர்கள்.*

**பெற்றோர்கூட்டம் 10.10.2021** தவிர்க்கமுடியாத காரணத்தினால் நடைபெறமுடியாமல் போனதை எண்ணி வருந்துகின்றோம். புதிய திகதி பின்பு அறிவிக்கப்படும்.

## நிதி

கட்டணம் சார்பான குறுந்தகவல்கள்(SMS) தங்களுக்கு கிடைத்திருக்கும். முடிவுத்திகதிக்கு முன் கட்டணங்களைச் செலுத்தும்படி வேண்டுகின்றோம்.

**கட்டணவிபரம்:**

1. அன்னை உறுப்பினருக்கான கட்டணம் - 100,- (ஒரு மாணவனுக்கு)
2. தவணைக்கட்டணம் - 700,- (ஒரு தவணை மற்றும் மாணவனுக்கு)
3. தமிழர் வள மேம்பாட்டுநிதி - 200,- (ஒரு தவணை மற்றும் மாணவனுக்கு)
   ஒரு குடும்பத்திற்கான மொத்தத்தொகை 5000,-.

**குறிப்பு:** வழங்கப்பட்ட தொகையை விட மேலதிகமான தொகையுடன் குறுந்தகவல் கிடைததிருந்தால், அதன் பொருள் கடந்தகாலங்களில் தங்களால் செலுத்தத்தவறிய தொகையும் இணைக்கப்பட்டுள்ளது என்பதே ஆகும். மேலதிக விபரம் தேவைப்படின் எம்மைத் தொடர்புகொள்ளவும்.

- **இனிவரும் காலங்களில் அன்னை லோறன்ஸ்கூக் வளாகத்தின் மின்னஞ்சல் lorenskog@annai.no மற்றும் தொலைபேசி இலக்கம் 91875537**

***எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.***

நன்றி!

நிர்வாகம்
அன்னை லோறன்ஸ்கூக் வளாகம்

**நாம் தமிழர்!**
**தமிழை வளர்க்கப்**
**பணிபுரிவோம்!**

# நவராத்திரி விழா 2021

## அழைப்பிதழ்

இடம்: ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஓசன் பாடசாலை - பெற்றோர் இணையவழி

அழைப்பு: தங்களுக்குரிய வைபர் குழுமங்களில் அனுப்பிவைக்கப்படும்

காலம்: 16.10.2021 சனிக்கிழமை

நேரம்: 10:00 மணி

எமது கலை, பண்பாடு, கலாசார விழுமியங்களை புலம்பெயர்தேசங்களில் எம் இளையவர்களும் பேணிக்காத்து மகிழ்வுடன் வாழ்ந்திட வழிசெய்யும் வகையில் தமிழர் விழாக்களை நாம் ஆண்டுதோறும் எமது வளாகத்திலும் நடாத்திவருவது தாங்கள் அறிந்ததே.

இவ்வாண்டு ஓசன் பாடசாலை விதிகளுக்கேற்ற முறையில் நவராத்திரி விழாவினை நடாத்தத் திட்டமிட்டுள்ளோம். அதாவது 8ஆம் வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்களும் நிகழ்ச்சிகளை வழங்கும் மாணவர்களும் அவர்களுக்குப் பொறுப்பான ஆசிரியர்களும் நேரடியாகவும், ஏனையவர்கள் வகுப்பறைகளிலிருந்து இணையவழியிலும், அனைத்துப் பெற்றோர்களும் இணையவழியினூடாகவும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் வாணிவிழாவில் நேரடியாகக் கலந்து சிறப்பிக்க இருப்பவர்கள் அனைவரும் எமது பண்பாட்டுடையுடன் கலந்துகொள்வது சிறப்பு.

நன்றி.

இவ்வண்ணம்,
நிர்வாகம்
அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - லோறன்ஸ்கூக் வளாகம்

# நவராத்திரி விழா 16.10.2021

## நிகழ்ச்சி நிரல்

1. வரவேற்புரை
2. அகவணக்கம்
3. பாடசாலைக் கீதம்

   4ம் வகுப்பு மாணவர்கள்

4. பூஜை - வழிபாடு
5. ஏடுதொடக்கல் - புதிய மாணவர்கள் கலைவகுப்பில் இணைதல்
6. பாட்டு

   கலைவகுப்பு மாணவர்கள்

7. நடனம்

   கலைவகுப்பு மாணவர்கள்

8. ஒப்படை

   9ம் வகுப்பு மாணவர்கள்

9. கலை ஆசரியர்களிடம் மாணவர்கள் ஆசிபெறுதல்.
10. நன்றியுரை.
11. திருச்சோறு (பிரசாதம்) வழங்கல்.

**அவசியம் ஏற்படின் நிகழ்ச்சிநிரலில் மாற்றம் ஏற்படும்.**